

நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு 26.08.2025 அன்று திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு எண் 28க்குட்பட்ட அண்ணா நகர் பகுதியில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் அமைக்கப்பட்டு வரும் விளையாட்டு மையத்தின் கட்டுமானப் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைவாகவும் தரமாகவும் மேற்கொள்ள அலுவலர்களுக்கு ஆலோசனைகள் வழங்கினார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன், மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் லி.மதுபாலன், நகரப் பொறியாளர் சிவபாதம், நிர்வாகப் பொறியாளர் பாலசுப்ரமணியன், மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கரூர் மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. அறிக்கை!

கரூர், ஆக. 30-

கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



கரூர் மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் இன்று (30.08.2025 - சனிக்கிழமை) மாலை 5.00 மணிக்கு கரூர் மாவட்ட கழக அலுவலகம் (கலைஞர் அறிவாலயம்) தளபதி அரங்கில் மாவட்டக் கழக அவைத் தலைவர் டி.ராஜேந்திரன் தலைமையிலும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் கே.சி.பழனிச்சாமி, கழக நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், கழக சட்டத்துறை இணைச் செயலாளர் என்.மணிராஜ், கழக நெசவாளர் அணி செயலாளர் பரணி கே.மணி, குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா.மாணிக்கம் எம்.எல்.ஏ., அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர். இளங்கோ எம்.எல்.ஏ. கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் க.சிவகாமசுந்தரி எம்.எல்.ஏ., கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணை செயலாளர் முனவர் ஜான், கழக வர்த்தக அணி துணை செயலாளர் வே.பல்லவி ராஜா, கழக தொழிலாளர் அணி துணைச் செயலாளர் பி.விஜயகுமார் ஆகி யோர் முன்னிலையிலும் நடைபெறுகிறது.

அதுசமயம் மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், கழக பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் பொறுப்பாளர்கள், மாவட்ட அனைத்து அணி அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:

1. 17.09.2025 அன்று கரூரில் நடைபெறும் கழக முப்பெரும் விழா

2. கழக வளர்ச்சி பணிகள்.

இவ்வாறு கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி. செந்தில்பாலாஜி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.







அன்பில் அறக்கட்டளை நடத்தும் அன்பில் 26 மாணவர் வழிகாட்டல் விருதுகள் வழங்கும் விழா திருவெறும்பூர் மான்ட்ஃபோர்ட் பள்ளி வளாகத்தில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் முன்னிலை மண்டல குழுத் தலைவர் மு.மதிவாணன், பள்ளிக் கல்வித்துறை இணை இயக்குநர் வை.குமார், திருச்சி முதன்மைக் கல்வி அலுவலர், கோ.கிருஷ்ணப்பிரியா, முதல்வர் மான்போர்ட் பள்ளி அருட்சகோதரர் எ.ராபர்ட் லூர்துசாமி, மாணவ – மாணவிகளுக்கு தன்னம்பிக்கையை வழங்கும் விதமாக சிறப்பு சொற்பொழிவாளர்கள் உரையாற்றினர் . வையத் தலைமை கொள் ஆசிரியர் மனசு திட்ட ஒருங்கிணைப்பாளர் சிகரம் சதிஷ்குமார், மெய்ப் பொருள் காண்பதறிவு மதுரை, வி.ராமகிருஷ்ணன் தன்னம்பிக்கை பேச்சாளர்கள் உரையாற்றினர்.

# சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. அறிவிப்பு!

சேலம், ஆக. 30-

சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் டி.எம். செல்வகணபதி எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



சேலம் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் வருகின்ற 02.09.2025 செவ்வாய்கிழமை அன்று காலை 10.00 மணி அளவில், எடப்பாடி, நைனாம்பட்டியில் உள்ள நடராஜன் மஹால் திருமண மண்டபத்தில் மாவட்டக் கழகச் செயலாளர், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி தலைமையில், மாநில இளைஞர் அணி துணை செயலாளர் பி.எஸ். சீனிவாசன் முன்னிலையில் நடைபெற உள்ளது.

அதுசமயம் மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர்க் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

இளைஞர் அணி உறுப்பினர்கள் சேர்த்தல் குறித்து, கலைஞர் நூலகம் அமைத்தல் குறித்து, கிளை, வார்டு இளைஞர் அணி நிர்வாகிகள் நியமனம் குறித்து, பாக அமைப்பாளர்களுக்கான சமூக வலைதள பயிற்சி, சமூக வலைதள செயல்பாடுகள் குறித்து, கழக ஆக்கப் பணிகள்

சேலம் மேற்கு மாவட்ட செயலாளர் டி.எம்.செல்வ கணபதி எம்.பி. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# கழக இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞரின் 102–வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!



சிவகங்கை வடக்கு ஒன்றியம்,
சிவகங்கை மாவட்டம்.



குருவிகுளம் தெற்கு ஒன்றியம்,
தென்காசி வடக்கு மாவட்டம்.



ஆத்தூர் மேற்கு ஒன்றியம்,
திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.



விழுப்புரம் மேற்கு நகரம்,
விழுப்புரம் மத்திய மாவட்டம்.



பவானிசாகர் பேரூர்,
ஈரோடு வடக்கு மாவட்டம்.



ஜெயங்கொண்டம் கிழக்கு ஒன்றியம்,
அரியலூர் மாவட்டம்.



கொங்கணாபுரம் பேரூர்,
சேலம் மேற்கு மாவட்டம்.



திருக்கழுக்குன்றம் தெற்கு ஒன்றியம்,
காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம்.



மண்ணச்சநல்லூர் மேற்கு ஒன்றியம்,
திருச்சி வடக்கு மாவட்டம்.